மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.125/2021

வாக்குமூலம்: பி.வா.சா.1 சென்னித்துரை

10.09.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :– வாதி தங்கராஜுக்கு 24.09.2009 தேதியிட்ட கிரைய ஆவணப்படி சர்வே எண்.59/4ல் சொத்து பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் இவ்வழக்கு விபரத்தை தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொண்டேன். வாதி இந்த வழக்கில் அவருடைய கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார், அந்த விபரத்தை தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 கிரைய ஆவணப்படி சர்வே எண்.59/4ல் உள்ள 2 ஏக்கர் பூமி வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்ணில் எங்களுக்கு பாதை உள்ளது. மேற்படி 2 ஏக்கர் பூமி வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது தெரிந்தும் வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி நிலத்திற்கு வடக்கு பக்கம் கிருஷ்ணசாமி கவுண்டர் பூமியாக இருந்து தற்சமயம் காளியம்மாள், நாச்சம்மாள் ஆகியோர் நிலங்களாக உள்ளது என்றால் சரிதான். அதற்கிடையில் பாதை உள்ளது. வாதி பூமிக்கும் மேற்கு பக்கம் கிருஷ்ணசாமி கவுண்டர், சின்னப்பழனிச்சாமி கவுண்டர் பூமிகள் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. உங்களுடைய எதிர்வழக்குரையில் உங்கள் சொத்து மற்றும் இதர பிரதிவாதிகளின் சொத்து ஆவணங்கள் பற்றி கூறியுள்ளீர்களா என்றால் சிட்டா ஆவணம் கொடுத்துள்ளேன். உங்கள் எதிர்கோருரிமையுடன் கூடிய எதிர்வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் உங்களுடைய மற்றும் இதர பிரதிவாதிகளின் சொத்து ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், சொத்துக்கான சர்வே எண்களை குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி சொத்து கிழக்கு ஆயக்குடி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். உங்கள் சொத்தும், இதர பிரதிவாதிகளின் சொத்தும் மேற்கு ஆயக்குடி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். எதிர்கோரிக்கையில் சொன்ன பாதை யாருடைய நிலத்தில் ஆரம்பிக்கிறது என்றால் அது சரியாக தெரியவில்லை, ஊரிலிருந்து அது தொடர்ந்து வருகிறது. நீங்கள் சொன்னவாறு நீண்ட நாட்களாக அந்த பாதையை அனுபவித்து வருவதாக கூறியுள்ளீர்கள், அது உண்மையாக இருந்திருந்தால் அந்த பாதை யாருடைய நிலத்தில் ஆரம்பிக்கிறது என உங்களால் கூறமுடியும் என்றால் சரியல்ல. வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை சுற்றி விவசாய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக விவசாய நிலங்களின் அத்துக்களில் வரப்புகள்

இருக்கும் என்றால் சரிதான். அவை 3 அடி உயரத்தில் இருக்குமா என்றால் அவ்வாறு இருக்காது. உங்களுடைய எதிர்வழக்குரையில் பாதை ஆரம்பிக்கும் இடத்தில் என்ன அகலம், முடியும் இடத்தில் என்ன அகலம் கொண்டுள்ளது என்றும், நீளம் எவ்வளவு என்றும் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். நீங்கள் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. டி.கே.என்.புதூரிலிருந்து கலிக்கநாயக்கன்பட்டிக்கு 30 அடி அகலத்தில் ஒரு பொது ரோடு உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. அவ்வாறு பாதை உள்ளது என்றும், வேண்டுமென்றே மறைக்கிறீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி 30 அடி பொது ரோடு வழியாக உங்களுடைய சொத்துக்களுக்கு தனிப்பாதை உள்ளது என்றால் சரியல்ல. உங்கள் எதிர்கோரிக்கையில் சொன்னவாறு வாதிகளின் நிலத்தில் உள்ளதாக சொல்லும் பாதை தவிர உங்கள் சொத்துக்கு வேறு பாதை உள்ளதா என்றால் வேறு பாதைகள் இல்லை. உங்கள் சொத்தில் இருந்து தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் பாதை உங்களாலும், இதர பிரதிவாதிகளாலும் பொதுமக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. நீங்கள் எதிர்வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொன்ன இலந்தை மரம், கருப்பண்ண சாமி கோயில் யாருக்குச்சொந்தமான இடத்தில் உள்ளது என்றால் அது பொதுவாக விடப்பட்டுள்ளது. அந்த கோவில் பட்டா பூமியில் உள்ளதா என்றால் அது எனக்கு தெரியவில்லை. அந்த கோவில் 9ம் பிரதிவாதி ஈஸ்வரன் பூமியில் உள்ளது என்றும், அதை நான் மறைக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 27.08.2021ம் தேதி வாதி அவருடைய சொத்தில் கம்பி வேலி போட முயன்றபோது நானும், இதர பிரதிவாதிகளும் அதை தடுத்து பிரச்சனை செய்தீர்கள் என்றால் சரியல்ல. வாதி அதன்பேரில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை நடந்ததா என்றால் என்னிடம் விசாரிக்கவில்லை. 1ம் பிரதிவாதி முருகசாமியிடம் போலீசார் விசாரணை செய்தார்கள். போலீசார் சொத்துக்களை வருவாய்த் துறையினர் மூலம் அளந்துகொள்ள அறிவுறுத்தினார்கள் என்றால் அவ்வாறு இல்லை. 11.09.2021ம் தேதி நில அளவையர், வருவாய் ஆய்வாளர் உள்ளிட்டோர் சொத்துக்களை அளந்து அத்துமால் செய்தார்கள் என்றால் சரியல்ல. 11.09.2021ம் தேதி அத்துமால் செய்து தாவாச்சொத்து முழுவதும் வாதிக்கு சொந்தமானது என எல்லை நிர்ணயம் செய்தார்கள் என்றும், அதை நீங்கள் வேண்டுமென்றே மறுக்கிறீர்கள் என்றால் சரியல்ல. அன்றைய தினம் நீங்களும் மற்ற பிரதிவாதிகளும் மாலை சுமார் 6.00 மணியளவில் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அத்துமீறி நுழைந்து வேலி அமைக்க வைத்திருந்த

பொருட்களை சேதப்படுத்தி வாதியை அடித்து காயப்படுத்தினீர்கள் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக ஆயக்குடி காவல் நிலையத்தில் வாதி புகார் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்காக வாதி பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார் என்றால் சரியல்ல. அதே தினத்தில் வாதிக்கு பிறகு, அரசு மருத்துவமனையில் 1ம் பிரதிவாதி சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரியல்ல. வாதி கொடுத்த புகாரின் பேரில் உங்கள் மீதும் மற்ற பிரதிவாதிகள் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதன்பிறகு 1ம் பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில் வாதி வகையறா மீது ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவர்களுக்குள் நடந்த பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது. ஆகவே உங்களுக்கு வாதிக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் இடையே நடந்த பிரச்சனை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R. KARTHIKEYAN

Digitally signed by R. KARTHIKEYAN
Date: 2024.09.10 16:38:30 +0530

District Munsif,

Palani.